# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
# මැතිවරණ ප්‍රචණ්ඩක්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

No. 6 1/B, Layards Road, Colombo 05. **Tel:** +94112584047 / +94114503001
**Fax**: +94112584047 **E-mail**: cmev@cpalanka.org **Web:** www.cmev.org


*திகதி: ஜனவரி 11, 2023, கொழும்பு.*

**<u>பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் அரசியலமைப்பிற்கு முரணான நகர்வு தொடர்பான ஊடக அறிக்கை</u>**

பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரான நீல் பண்டார ஹபுஹின்ன அவர்களினால், நடைபெறவிருக்கின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிட எதிர்பார்த்துள்ள வேட்பாளர்களிடமிருந்து கட்டுப்பணம் பெற்றுக் கொள்வதனைத் தவிர்க்குமாறு மாவட்ட செயலளார்களை அறிவுறுத்தி 2023, ஜனவரி 10 அன்று வெளியிடப்பட்ட கடிதம் தொடர்பாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தனது ஆழ்ந்த கரிசனையினை வெளிப்படுத்துகின்றது. 2023 ஜனவரி 9 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கமைய இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இலங்கை தேர்தல் சட்டக் கட்டமைப்பின் படி, தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தொடர்பான அறிவித்தலை வெளியிட்டதன் பின்னர், வர்த்தமானி அறிவித்தலொன்றினூடாக நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான தெரிவத்தாட்சி அதிகாரிகளாகவும், அத்தேர்தல்கள் தொடர்பான அனைத்து நிர்வாக விடயங்களுக்கும் கையெழுத்திடுகின்ற அதிகாரமுடையவர்களாகவும் மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். தேர்தல் ஆணைக்குழுவானது 2022 டிசெம்பர் 21 எனத் திகதியிடப்பட்ட இல. 2311/26 இனைக் கொண்ட விசேட வர்த்தமானியொன்றினூடாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் மற்றும் உதவி தெரிவத்தாட்சி அதிகாரிகளை நியமித்திருந்தது. தற்போது மாவட்டத் தேர்தல் செயற்பாடுகளுக்கானத் தலைவர்களாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு எதிராக அமைச்சரவையினால் முறையற்ற செல்வாக்கு பயன்படுத்தப்பட்டுள்ளமையானது ஜனநாயக தேர்தல் செயன்முறைகளுக்கான தெளிவான அச்சுறுத்தலாகும் என்ற நிலைப்பாட்டினை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் கொண்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 4(1) மற்றும் இல. 2311/26 இனைக் கொண்ட விசேட வர்த்தமானி என்பவற்றிற்கு அமைவாகச் செய்யப்பட்டுள்ள நியமனங்களுக்கு பின்னர் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு காணப்படுகின்ற பொறுப்புடைமை தொடர்பில் தேர்தல் ஆணையாளர் நாயகம் உடனடியாக விளக்கியிருந்தமையினை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் பாராட்டுகின்றது. அத்துடன், அத்தெரிவத்தாட்சி அதிகாரிகளின் அரசியலமைப்பு கடமையினை வலியுறுத்திக் காட்டுவதற்காக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் ஆனது அரசியலமைப்பின் உறுப்புரை 104ஊ இனை மேற்கோள் காட்ட விரும்புகின்றது.

> *104 ஊ.(1)* "**ஆணைக்குழுவானது ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்துக்கும் ஒரு தெரிவத்தாட்சி அலுவலராக இருக்கவென ஓர் ஆளைப் பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து, கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் நியமித்தல் வேண்டுமென்பதுடன், தெரிவத்தாட்சி அலுவலரின் கடமைகளை நிறைவேற்றுவதில் அவருக்கும் உதவுவதற்கு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களைப் பெயர்குறித்து அல்லது பதவிகுறித்து நியமிக்கலாம்.**"

*(2)* “**ஓராம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வோர் அலுவலரும் அவருக்குக் குறித்தொதுக்கப்பட்டனவான அத்தகைய கடமைகளையும் பணிகளையும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் ஆணைக்குழுவினால் வழங்கப்படற்பாலதான அத்தகைய பணிப்புகளுக்கமைந்தவராதல் வேண்டுமென்பதுடன், அதற்காக ஆணைக்குழுவுக்குப் பொறுப்பைக் கொண்டவராதலும் வகை சொல்லற்பாலராதலும் வேண்டும்.**”

மேற்குறிப்பிடப்படுள்ள அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கமைய, பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்கள், அரசியலமைப்புக்கு முரணானவை என்பதுடன் அவற்றிற்கு பணிந்து செயற்படல் அரிசியலமைப்புச்சட்ட மீறல் ஒன்றாகும்.[1]

சம்பந்தப்பட்ட அனைத்து தரப்புக்களினதும் எதிர்ப்பினைத் தொடர்ந்து அக்கடிதத்தினை மீளப் பெற்றுக் கொள்கின்றமை தொடர்பான பொது நிர்வாக அமைச்சின் செயலாளரின் தீர்மானத்தினை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் குறிப்பிட்டுக்காட்டுகின்றது. தங்களுடைய வாக்குரிமையினை பிரயோகிப்பதற்கான பொது மக்களின் அடிப்படை உரிமையினை மீறுகின்ற எந்த முயற்சியினையும் செய்வதிலிருந்து தம்மைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அரசாங்கத்திடமும், நாட்டின் ஜனநாயக ஆட்சியினை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பாயுள்ள அனைத்து செயற்பாட்டாளர்களிடமும் நாம் வலியுறுத்துகின்றோம்.





**கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து**
இணை-அழைப்பாளர்

**திரு. உதய களுப்பத்திரண**
இணை-அழைப்பாளர்

**திரு. லசந்த டி சில்வா**
இணை-அழைப்பாளர்

---

[1] அரசியலமைப்பு உறுப்புரை *104 எஎ (1), 1978* ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பு